ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. 2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2001-2002 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை @ இம்மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.13.08 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.11.87 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூ.1.21 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 31-1-2001 அன்று, கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாரா செலவு நிதியிலிருந்து, முன்பணங்கள் பெற்று, "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாரா செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலின்போது பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்ட காவல் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறை சாரா பணியாளர்களுக்கும் உணவுக் கட்டணங்கள் அளிக்கும் வகையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.3.08 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

@ 29-30 ஆம் பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளன.

4. வேலூர் அரசினர் மருத்துவக் கல்லூரிக்கு அறைகலன்கள், கரும்பலகைகள், ஆய்வுக்கூட சாதனங்கள், ஏனைய பயிற்றுவிப்பு உபகரணங்கள் ஆகியன வாங்கவும், பணியாளர்களை நியமிக்கவும் அரசு ரூ.1.75 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 18-மருத்துவம்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. பிரதம மந்திரியின் கிராமோதயா திட்டத்தின்கீழ் மூன்று வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்குத் துணை சத்துணவு அளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தும் வகையிலான தொடக்கச் செலவுக்காக, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.4.43 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் பற்றி நான் இங்கு மிகச் சுருக்கமாக தற்போது கோடிட்டுக் காட்டியுள்ளேன். இவை குறித்தும் ஏனைய இனங்கள் குறித்தும் முழுமையான விவரங்கள், பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

7. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம் மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்.

(முற்பகல் 10-45

**2001-2002 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 79,18 |
| 10 பால் வழங்கு செயல் திட்டங்கள் | 8,10 |
| 15 காவல் துறை | 3,20,60 |

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 17 கல்வி | 3 |
| 18 மருத்துவம் | 1,75,00 |
| 19 மக்கள் நல்வாழ்வு | 63,93 |
| 23 கூட்டுறவு | 1 |
| 27 ஊரக வளர்ச்சி | 27,35 |
| 29 சமூக நலன் | 4,43,12 |
| 32 வீட்டுவசதி | 50,00 |
| 35 பாசனம் | 5 |
| 38 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 2 |
| 42 பல்வகை | 1 |
| 50 சுற்றுலா | 17,10 |
| மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு | **11,84,50** |
| ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | |
| 52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 82,82 |
| 54 பாசனம் குறித்த மூலதனச் செலவு | 20 |
| 56 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 2 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | **83,04** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61 மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் | 37,55 |
| பெருமொத்தம் | **13,05,09** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS